தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தக்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்

தொகுதி V. { துர்மதி௵ வைகாசி௴ } பகுதி 2.

மூலிகைகளின் பிரதான திரவியம்.

The Active Principles in Medicinal Drugs

ஸ்ரீமான் வைத்திய விசாரத க. கு. நடேசசாஸ்திரியார்,
M. R., A. S., ஸ்ரீமான் எலியூர்க்கர் சுப்பிரமணியசர்மா
இருவருமாக எழுதியது.

ஆங்கில ரஸாயன ஆராய்ச்சியில் மிகத்தேர்ச்சியடைந்த ஆங்கிலவைத்தியர் ஒருவர் கடுக்காய் என்னும் திரவியத்தைப் பரிசீலனை செய்ததில், இரண்டு வாடைல் ஆயில், இரண்டு பிசின் இரண்டு ஆஸிட் அல்லது ஹைடரேட், பாஸ்பேட், ஸால்ட் முதலிய பல திரவியங்கள் இருப்பதாகக் கண்டனர். அவைகள் ஒன்றிலும் விரேசன சக்தியில்லாமையையும், மூலிகையில் அச்சக்தி யிருப்பதையும் கண்டு ஆச்சரியமடைந்து இதற்குக் காரணம் இன்னதென்று சொல்லத் தெரியாமல் திகைத்தார் என்று நமது நண்பர் ஒருவர் பம்பாயில் நடைபெற்ற விஷயத்தை நமக்குக் கூறியிருக்கிறார்.

ஆகவே பிரதானத் திரவியத்தைக் கண்டு பிடித்தல் என்பது சிகித்ஸைக்கு ஒரு விதத்திலும் பிரயோஜனமில்லை என்பதையும், அதில் நம்பிக்கை வைத்தல் என்பது முற்றிலும் பிரமையே ஒழிய வேறில்லை என்பதையும், சிகித்ஸைக்கு உபயோகமானது திரவியங்கள் யாவையும் அவைகளின் ரஸவீர்ய விபாகம் பிரபாவம் என்னும் இம்முறையில் ஆராய்ச்சி செய்வதே தான் என்பதையும், பிரதான திரவியம் கண்டுபிடிக்கப் பட்ட பின்னும் இம்முறையில் மறுபடியும் ஆராய்ச்சி செய்ய வேண்டியது தான் என்பதையும் நாம் அறியவேண்டியிருக்கிறது.

மேனாட்டு வைத்தியர்கள் ஒன்று மறியா மூடர்களென்று நாம் சொல்ல முன்வரவில்லை. ஆனால் அவர்களும் அவர்களுடைய பிரதானத்திரவியங்களுக்கு ரஸவீர்ய விபாகத்தை ஒப்புக் கொள்ளாதவரை அது சிகித்ஸைக்கு பிரயோஜனமில்லை என்பது தான் நம்முடைய கருத்து.

சிகித்ஸை என்பதில் வியாதி நிவாரணமே முக்கிய உத்தேசமானதாகையால் எம்முறையாயினும் ஆகுக, அதனுடன் நமக்கு விரோதம் கிடையாது. ஆனால் ஒருவர் தமக்குத்தாமே ஸர்வவல்லமையை ஆரோபணம் செய்து கொண்டு இதரமுறைகளைப் பரிகசிக்கவும் இகழவும் அவமதிக்கவும் வேண்டுவதில்லை என்பதை வற்புறுத்தக்கூடும். இத்தொழிலில் அதிகமாக உற்சாகமடைந்திருக்கும் மேனாட்டு முறையை ஆண்டு வரும் வித்வான்களுக்கு இந்த ரஸவீர்ய விபாகத்தின் பிரயோஜனமாவது முக்கியமாக ஆயுர் வேதமுறையின் தத்துவமாவது தெரியாமலிருப்பதே அதற்கு முக்கியகாரணம். தங்களுக்கு அம்முறை தெரியாமலிருப்பதோடு, அதையறிந்து கொள்ள ஆவலும் இல்லாமலிருக்க ஆயுர் வேதமுறையை இகழ்வதில் மட்டும் ஸர்வஸ்வதந்திரம் பாராட்டுவது அவர்களுடைய அகங்காரத்தினு லென்றே சொல்ல வேண்டும்,

நாம் மேல்சொல்லிய விஷயத்தை நிரூபிக்க ஒரு சிறு நிகழ்ச்சியை இங்கு எடுத்துக் கூற ஆவலுள்ளவனாக விருக்கிறேன். அதாவது சில மாஸங்களுக்கு முன் மைசூர் ராஜ்யத்தில் ஆயுர்வேதக் கல்வியை பரிஷ்காரம் செய்வதற்கென்று சிலகாலமாக முஜராய் இலாகாவிலிருந்து முயற்சித்து வருகிற விஷயம் நேயர்கள் அறியக்கூடும். ஒரு சமயம் அவ்விலாகா சூபிரண்டெண்டு ஒருவர் சென்னையில் பல ஆயுர்வேத வைத்தியர்களுடன் கலந்து பேசவந்திருந்த சமயம் நடைபெற்ற ஒரு மீட்டிங்கில் ஆங்கில வைத்தியர்களும் இருவர்கள் வரவழைக்கப் பட்டிருந்தார்கள். மைசூர் ஆயுர்வேதகலாசாலைக்கு அனுபந்தமான ஆராய்ச்சி சாலை ஒன்று அமைக்கப்படவேண்டுமென்றும் அதில் திரவியங்களை அவைகளின் ரஸவீர்யவிபாக முறைப்படி ஆராய்ச்சி செய்யக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும் ஒரு ஆயுர்வேத வைத்தியர் சொல்ல அங்கு வந்திருந்த மிஸ்டர்—L. R. C. P. & S. அவர்களும் மிஸ்டர்—B. A. M. B. C. M. அவர்களும் அது கூடாதென்றும் அவர்களும் ஆக்டிவ் பிரின்ஸிபில் இன்னதென்று தெரியாதென்றும் வாதாடி அவ்வாராய்ச்சிசாலை நடைபெறுமலிருக்க வேண்டியதற்கு அனுகூலமாகக் கக்ஷிபண்ணி அதை நிறுத்திவிட வேண்டிய நிலைமைக்கு ஆய்விட்டது என்பதை ஆராய்வோமாகில் அவர்களுக்கு ஆயுர்வேதத்தின் பாலுள்ள நம்பிக்கையும் சிரத்தையும் அபிமானமும் நன்கு விளங்கும். நிற்க,

ஆயுர்வேதத்தில் கூறப்பட்டுள்ள ரஸவீர்யவிபாகமுறைப்படி ஆராய்ச்சி செய்யப்பட வேண்டியதன் காரணம் என் என்பதை அடியில் கூறுவோம். ஜகத்திலுள்ள சிருஷ்டிவஸ்துக்கள் யாவும் பஞ்சபூதவிகாரம் என்பது யாவரும் அறியக்கூடும். ஆகவே மானிடசரீரம் எவ்வாறு பஞ்சபூதவிகாரமோ அவ்வாறே ஜடதிரவ்யங்களான ஸ்தாவர வஸ்துக்களுமாம். ஆகவே

சகலமூலிகைகளும் பஞ்சபூத விகாரங்களாகும். பஞ்ச பூதவிகாரங்களால் உண்டான ஒரு சரீரத்தில் பேதங்கள் ஏதாயினும் ஏற்படும்பொழுது பஞ்சபூத சம்பந்தமான மூலிகைகளால் அப்பேதங்களை நிவர்த்திசெய்யப்படுவது நியாயமும் உசிதமும் ஆகும். இதுவே யுக்திக்குப் பொருத்தமானதாக விருக்கிறது.

எவ்வாறு பஞ்சபூதவிகாரமான திரவியங்கள் சரீரத்தில் எண்ணியபடி வேலைகளைச்செய்து ஸ்வஸ்தியத்தைத்தருகின்றன என்றால், அதற்குமுன் சிலவிஷயங்கள் நமக்குத் தெரிய வேண்டியிருக்கிறது. அவைகளை இங்கு குறிப்போமாகில் விரியுமாகையால் சுருக்கமாக அதன் உண்மைகளை இங்கு எழுதுவோம்.

சரீரம் எப்பொழுது பஞ்சபூதவிகாரமோ, சரீரத்தில் ஏற்படும் வியாதிமுதலியவைகளும் பஞ்சபூதவிகாரம். அவ்வியாதிகள் வாத பித்த கபம் என்னும் மூன்று தோஷங்களால் உண்டாகின்றன. ஆகவே அவைகளும் பஞ்சபூதவிகாரங்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை.

வியாதி என்பதோ சரீரத்தில் ஏற்படும் அவஸ்தா விசேஷம், அந்த அவஸ்தையோ ஆகாரவிகாராதிகளால் ஏற்படுகின்றன. அவைகளோ பஞ்சபூதவிகாரங்கள். ஆகையால் பஞ்சபூதவிகாரங்களால் ஏற்படும் வியாதிக்குப் பஞ்சபூத விகாரங்களாலுண்டான மூலிகைகளை உபயோகிக்கிறோம். அவை எவ்விதம் சமனத்தைச் செய்கின்றன எனில், வாத பித்தகபம் என்னும் மூன்று தோஷங்களும் இதர திரவியங்கள்போல் சரீரத்திலுள்ள பதார்த்தங்கள். சூக்ஷ்மமானவைகள்: அகோசரங்கள். இவைகள் சமமாக இருக்கவேண்டிய நிலைமையில் இருந்தால் ஸ்வஸ்தி என்றும், மாறுபட்டால் வியாதிஸ்தன் என்றும் கூறப்படும். மேலும்,

எப்பொழுது பதார்த்தங்களோ, அவைகளில் ஏதாவது ஒன்று அதிகப்படவோ குறைவுபடவோ ஏற்படக்கூடும். சரீரமோ ஒவ்வொரு க்ஷணமும் ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும் மூன்று காரியங்களும் நடைபெற்றுவரும் கூடு அல்லது இருப்பிடம். ஒவ்வொரு க்ஷணமும் உத்பத்திகாரகங்கள் ஏற்படும் பொழுது ஒருஸமயத்தில் ஏதாவது ஒருபாகத்தில் கிரமத்துக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தொழில்கள் நடைபெறக்கூடும். கிரமத்துக்கு அதிகமாகில் ஏதோ ஒருவஸ்துதேவை என்று ஏற்படும். கிரமத்துக்குக் குறைவாக ஏற்படின் அதிகமாக உண்டாயிருக்கும் வஸ்து வெளியேற வேண்டுமென்ற ஆவல் உண்டாகிறதென்று ஏற்படுகிறது. இந்த நிலைமையே வியாதி எனப்படும். தேவையான வஸ்துவை அளிப்பதும் அதிகமான வஸ்துவை வெளிப்படுத்துவதும் சிகித்ஸை எனப்படும். இந்நிலைமையில் ஆயுர்வேதத்திற்கும் ஆங்கிலத்தில் கூறப்படும் பையோகெமிக் (Biochemic) முறைக்கும் யாதொரு பேதமும் கிடையாது என்பது நன்கு விளங்கும்,

அவைகளை எவ்வாறு அறிந்து செய்வது என்பது மற்றோர் வினா. அதாவது பஞ்சபூதவிகாரமான மூன்று தோஷங்களில் அது அதிகப்பட்டாலும் அவைகளை வெளிப்படுத்துவதென்றால் இன்னின்னவஸ்துக்கள் இன்னின்ன தோஷங்களை சமனம் செய்யக்கூடியதென்றும் அறிவது எங்ஙனம்? எனில் பஞ்சபூத விகாரங்களாலுண்டான திருதோஷங்கள் பஞ்சபூத விகாரமான ரஸங்களால் சமனமடைகின்றன. இன்னின்ன ரஸங்கள் இன்னின்ன தோஷங்களைச் சமனம் செய்கின்றன வென்று கூறப்பட்டுள்ள இம்முறை அசாஸ்திரீயம் என்று சொல்வது மதியீனமோ? அல்லது மதமோ? நாமறியோம்.

வாதபித்த கபமென்னும் திருதோஷங்களையும் கண்டிக்கக்கூடிய இந்த ரஸங்கள் ஒன்று அல்லது அனேகமாவெனில் ரஸங்கள் ஆறு என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அவை மதுரம், திக்தம், கஷாயம், லவணம், அம்லம், கடு எனப்படும். அவைகளில் பிருத்வி, ஜலம் பூயிஷ்டமாகவுள்ளது மதுரரஸம் என்றும், பிருத்வி, தேஜஸ் அதிகமாகவுள்ளது அம்லரஸம் என்றும், ஜடம் தேஜஸ் அதிகமாகவுள்ளது லவணரஸம் என்றும், வாயு ஆகாச பூதங்கள் அதிகமாக உள்ளது திக்தரஸம் என்றும், தேஜோ வாயுபூதங்கள் அதிகப்பட்டுள்ளது கடுரஸம் என்றும், வாயு ஆகாசபூதங்கள் அதிகப்பட்டுள்ளது கஷாயரஸம் என்றும் சொல்லப்படும்.

இந்த ஆறு ரஸங்களுமே வாத பித்தகபங்களை சமனம் செய்கின்றன. எவ்வளவெனில் மதுர ரஸம், வாதம்பித்தம் இரண்டையும் சமனம் செய்வதும், கபத்தை விருத்திசெய்வதுமாகும்; அம்லரஸம் வாதசமனம் செய்து கபபித்தத்தை வளரச்செய்கிறது. லவணரஸமும் அம்லரஸத்தைப்போல் கபபித்த வர்த்தகம்செய்து வாதசமனம் செய்கிறது. திக்தரஸம் கபபித்தசமனம் செய்து வாயுவை வர்த்தனம் செய்கிறது. கடுரஸம் கபத்தை சமனம் செய்து வாதபித்தத்தை அதிகரிக்கிறது. கஷாயரஸம் கபபித்தத்தைக் குறைத்து வாதத்தை அதிகரிக்கிறது. இவ்விதம் பஞ்சபூதவிகாரங்களான வாதபித்தங்களுக்கும் ரஸத்திற்கு அதிஷ்டானமான திரவ்யங்களுக்கும் ஸம்பந்தத்தை காட்டியதால் திரவ்யங்களுக்கு உள்ள ரஸத்தை அறியவேண்டியதற்கான அவசியம் கூறப்பட்டதாகும்.

இந்த ரஸமே சரீரத்தில் ஸம்யோகம் ஆகும்போது ஒருவித அநிர்வாச்யமான சக்தி உண்டாகிறது. அதுவே

அதன் வீர்யம். பிரபாவம் என்றும் கூறப்படும். அந்த ஸம்யோகமே விபாகம் என்று சொல்லப்படும். ஆகவே வைத்யத்திற்கு ரஸப்ரதானமாக உள்ள திரவ்யங்களை அம் முறையால் ஆராய்ச்சி செய்யவேண்டியதே அவசியமாகும் என்பதை வற்புறுத்த வேறுகாரணங்களும் வேண்டுமோ? பிரதான திரவியமே முக்கியம் என்று வாதாடும் மேனாட்டார் களும் இதை ஒப்புக்கொண்டே தீரவேண்டும். எந்தச் சக்தி யினால் பிரதான திரவ்யம் வேலைசெய்கிறதோ அதுவே அதன் பிரபாவம் என்று நாம் கூறுவோம்.

இனி அவர்கள் கூறும் பிரதான திரவியத்திற்கும் நமக் கும் ஏதாவது ஸாம்யம் உண்டாவென்று பார்ப்போம்.

நாம் பஞ்சபூதவிகாரம் என்று சொல்லப்படும் கொள் கையே அவர்கள் கார்பன் காம்பௌன்டு என்று கூறுகிறார் கள். எவ்வாறெனில் நம்முடைய பஞ்சபூதம் என்பவை பிரு திவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் எனவாகும். அவர்கள் கூறும் கார்பன் காம்பௌண்டு களிலும் இவைகளின் அம்சங் காணப்படுகின்றன. நாம் பிருதிவி என்பதை அவர்கள் கார்பன் என்றும், அப்பு என்பதை ஹைட்ராஜின் ஆக்ஸிஜின் என்றும், இரண்டு வாயுவிசேஷங்களின் ஸம்யோகம் என்றும் இந்த ஸம்யோகம் ஏற்படும் காலத்தில் உண்டாகும் ஒருவித உஷ் ணத்தையே நாம் தேஜஸ் என்றும் கூறலாம்.

இதுபோலவே மற்ற பூதங்களையும் இன்னதென்று ஆராய்ந்து சொல்ல ஸாத்தியமுண்டு. ஆனால் விரியும் என்னும் அச்சத்தால் நிறுத்திக்கொண்டு சொல்லியவைகளை நிரூபணம் செய்வோம்.

சர்க்கரை என்னும் பதார்த்தத்தை எடுத்துக்கொள்ளு வோம். பிருதிவி அப்பு அதிகமாகவுள்ள திரவியம் என்று

நாம் கூறுகிறோம். ஆங்கில சாஸ்திரப்படி இதற்கு கார்போ ஹைட்ரேட் என்று பெயர். அதாவது $C_{12}H_{22}O_{11}$ என்று சொல்லப்படும். நாம் முன்னமேயே மதுரரஸமானது பிரிதிவி அப்பு ஸம்பந்தப்பட்டது என்று சொல்லியிருக்கிறோம். அப்பு என்பது இரண்டுபாகம் ஹைட்ரஜினும் ஒரு பாகம் ஆக்ஸிஜினும் சேர்ந்தது. ஆகவே $H_{22}O_{11}$ என்று சொன்னதால் பதினொன்று பாகம் ஜலமும் இருப்பதாகவும் C_{12} என்று சொல்லப்பட்டிருப்பதால் பிரிதிவி அம்சம் 12பாகமும் ஆகச் செய்யப்பட்டிருக்கிறது என்று நாம் கணக்கிடலாம். இதனால் ஆங்கில சாஸ்திரங்களுக்கும் நமக்கும் அதிகப் பேதமில்லை என்பது நிரூபிக்கப்பட்டதாகும். அவர்களைப்போல் இன்னின்ன பூதம் இத்தனைபாகம் தானிருக்கிறதென்று துல்லியமாக நிர்ணயிக்காத போதிலும் ஸ்தூலமாக நாம் அதன் உண்மைகளை யறிந்திருக்கிறோம். துல்லியமான கணக்கு வைத்தியத்திற்கு ஒரு விதத்திலும் பிரயோஜனமில்லை யாதலால் அதில் பரிசிரமப்படவில்லை எனலாம். இதுபோல் ஒவ்வொரு ரஸங்களுக்கும் ஒற்றுமை காணக்கூடும். உத்தேசத்திற்கு மேல்வியாஸம் வளர்ந்து விட்டபடியால் அவைகளை இங்கு நிறுத்திக்கொண்டதாகும்.

தீர்க்கமாகவும் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றியும் ஆராய்ந்து பார்க்கும் விஷயத்தில் சாஸ்திர விஷயமான ஆராய்ச்சி செய்வதில் ஆயுர்வேத வைத்தியர்கள் பின்னடையவில்லை என்றும் தற்காலத்தால் அநேகம் நுட்பமான இயந்திரங்களின் ஸாதகங்களைக் கொண்டு நிர்ணயம் செய்யப்பட்ட உண்மைகளை ஆயுர்வேதப் பிரவர்த்தகர்களான ரிஷிகள் முன்னமேயே நமக்கு அறிவித்திருக்கிறார்கள். அவைகளை நாம், ஆராய்ச்சி முறை விட்டுப்போனதால் இக்காலத்தில் பரிசயமின்றிக் கையாட முடியவில்லை.

ஆராய்ச்சி என்பது எம்முறைக்காரர்களுக்கும் ஒன்றே யாதலால் இப்பொழுது கிடைக்கும் இயந்திர ஸாதனங்களை வைத்து ரிஷிகள் காட்டிய மார்க்கத்தைப் பின்பற்றி நாம் அவ்வித ஆராய்ச்சியை செய்து வரலாம். அதுவே ஆயுர் வேத அபிவிருத்திக்கு முக்கிய சாதனமாக விருக்கும்.

ஆங்கில முறையைப் பின்பற்றி வருபவர்கள் ஆயுர் வேதத்தைக் குறை கூறி இகழ்வதற்குச் சிறிதும் இடமில்லை என்பதை இங்கு பிரஸங்கானு பிரஸங்கமாக கூறவேண்டியதாயிற்று.

இனி ஆக்டிவ் பிரின்ஸிபிள் என்னும் பிரதான திரவியம் கண்டுபிடிப்ப தென்பதெல்லாம் உத்தேசமான ஸாதனத்தை அடைவதற்கு வழிக்காட்ட கூடிய மார்க்கமே ஒழிய அதுவே முடிவு என்றாவது அதுவே ஸித்தாந்தம் என்றாவது சொல்வதற்கிடமில்லை.

நாம் கீழ் காட்டப்பட்ட அநேக உதாரணங்களால் ஆக்டிவ்பிரின்ஸிபிள் என்பது ஒரு திரவ்யம் என்பதும் அது சக்தி யல்ல வென்றும் அதற்கு பிரமாணமும் காட்டக்கூடும் என்பதையும் அடியில் தெரிவித்துக் கொள்ளலாகும்.

The alkaloids are compounds occurring in plants, frequently constituting those parts of the plants which are more active when taken into the animal body. They are hence sometimes called the active principle of the plants. Many of these substances are used in medicine.

ரஸப்ரதானம் திரவியம் என்று முன் கூறியதாலும் ரஸமே வியாஸமடைந்து சில வீர்ய பிரபாவங்களை யடைகின்றன என்றும் அதனால் சரீரத்தில் வேலை செய்கின்றன

வென்றும் சொல்லியதால், ரஸம் திரவ்யம் என்று கொள்ள வேண்டியதாகும். அப்படியே ஆக்டிவ் பிரின்ஸிபிள் திரவ்யம் என்று காட்டியபடியாலும் அது சரீரத்தில் வேலை செய்கிறது என்று கூறியதாலும் அந்த ஆக்டிவ் பிரின்ஸிபிளையே நாம் ரஸம் என்று சொல்லக்கூடுமோ வென்னும் விஷயத்தை வேறி டத்தில் கூறுவோம்.

அதுவேதான் ரஸம் என்று நாம் வைத்துக்கொண்டு பேசினாலும் அதன் வியாஸ வீர்ய பிரபாவம் இன்னதென்று நாம் ஆராயவேண்டும்.

இவ்விஷயத்தை யாராய்ந்து தெரிந்துகொண்டு வருமள வும் மேனாட்டு வைத்திய நிபுணர்களுக்குத் தங்கள் சாஸ்திரம் பரிபூர்ணம் என்று சொல்லிக்கொள்வதற்குக் கொஞ்சமும் அதிகாரம் கிடையாது.

ஸர்வஞ்ஞான ஈஸ்வரன் சிருஷ்டியால் ஏற்பட்டிருக்கும் மூலிகைகளின் பிரபாவங்களையும் குணங்களையும் ஒருவன் கண்டுபிடித்துவிட்டேன் என்று பெருமை பேசிக்கொள் வது மிகவும் மதியீனமேயாகும். ஏனெனில் அவைகளின் ஸ்ரஷ்டாவாகவுள்ள ஸர்வ வல்லமையுள்ள ஈசுவரனது குணங் கள் எவ்வாறு மனோவாக்குகளுக்கு எட்டாதவையோ அப் படியே அவைகளின் குணங்களும் வாசாமகோசரயாகும். ஆனால் பெரியோர்களின் ஒரு வாக்கையே பிரமாணமாகக் கொண்டுதான் அவைகளை உபயோகிக்க வேண்டியதாக விருக் கிறது என்று இதை முடித்துக்கொள்கிறேன்.

अमीमांस्यान्ययिन्त्यानि प्रसिद्धानि स्वभाव : ।
आगमेनोपयोज्यानि भेषजानि विचक्षजै: ॥

மந்திரவாதிகளின் மாய வித்தைகள்.
The Miracles of Magicians.

(தொடர்ச்சி)

4. உயிரோடு புதைத்தல்.
4. Burying Alive.

ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர், B.A., B.L.,
தொகுத்தெழுதியது.

இந்த வித்தையைக் கயிறேறும் வித்தையைவிட விந்தையானது என்றே சொல்லவேண்டும். நாம் முன் சொல்லிய சாஸ்திரியானவர் இதில் ஏமாற்றம் ஒன்றும் இல்லையென்றும் சாஸ்திர விஷயமான பல சங்கதிகளை அறிந்து நடப்பதாலேயே இவ்வித்தையைச் செய்யமுடிகிறதென்றும் கூறுகிறார். கைஜ்ஜாலம், கண்கட்டு, தந்திரம் ஒன்றுமே இதிற் கிடையாதாம்.

மூன்று வாரங்களுக்கு மேற்பட்டு ஆறுவாரம்வரை பூமிக்குள் புதைந்துகிடந்து மறுபடியும் உயிருடனெழுவது—நேராக நிற்க வல்லமையில்லாத கயிற்றின்மீது ஏறுவதைப்போலவே—இயற்கை விதிகளுக்கு முற்றிலும் மாறுபாடானதே.

அமிர்தசரஸில் இருந்த ஒரு இந்தியச் சிற்றரசனின் முன்னிலையில் இந்த வித்தை நடைபெற்றதென்றும் அதைப் பலர் நன்கு கவனித்தவர்களாயால் ஏமாற்றத்துக்குச் சிறி

தும் இடமில்லை யென்றும் நமது சாஸ்திரி கூறுகிறார். அந்த விருத்தாந்தம் வருமாறு.

அச்சிற்றரசனது அரண்மனைக்கும் அமிர்தசரஸ் கோட்டைக்கும் நடுவே இதற்கென்று சிறு வீடொன்று கட்டப்பட்டது. பூமிக்குள் ஐந்தடி ஆழம் தோண்டி அதிலிருந்து செங்கலும் சுண்ணும்புமாகப் போட்டு வீட்டின் அஸ்திவாரம் கட்டப்பட்டது. அதற்குமேல் நன்கு பிணைத்த பலகைகளால் ஒரு சிறு அறை கட்டப்பட்டது. அதற்கு ஒரே ஒரு கதவுதானிருந்தது. ஜன்னல் ஒன்றும் கிடையாது. வேறு வழியாக உள்ளே செல்லுவதற்கும் இடை யொன்றும் கிடையாது.

மிகுந்த பணத்தை வாங்கிக்கொண்டு வித்தை செய்வதாக ஒப்புக்கொண்ட பக்கிரி ஜாதியில் ஹிந்து. அவனுக்குச் சுமார் நாற்பது வயதிருக்கலாம். அவன் நாற்பதுநாள் புதைந்துகிடப்பதாக ஒப்புக்கொண்டான். தன்னைப் புதைக்கும் குழி உலர்ந்த இடத்தில் இருக்கவேண்டுமென்பதும், எறும்புகள் உடலைத் தாக்காதிருப்பதற்பொருட்டு வேண்டிய மருந்துகளைப் பூசித் துணிகளால் மூடிவைக்கத் தன்னுடைய ஆட்களுக்கு அனுமதி கொடுக்கப்படவேண்டு மென்பதும், வித்தை காட்டுமுன் தன்னைத்தான் தயார்செய்துகொள்ளும் பொருட்டு இருபதுநாளைக்கு முன்னதாகவே தனக்குத்தெரிவித்துவிட வேண்டுமென்பதுமே அவன் ஏற்படுத்திய நிபந்தனைகள்.

இந்த இருபதுநாளும் அவனுக்குப் பால்தான் ஆகாரம். தனது உடலின் உட்புறத்தைச் சுத்தம் செய்வதற்காக மேன் மேலும் அழுக்கைஉண்டாக்கும் ஆகாரத்தை நீக்கிப் பாலையே பருகுவதாகச் சொன்னான். இன்னும் உடலின் உட்புறத்தைச் சுத்தம் செய்வதன்பொருட்டு நீளமான துணிக் கிழிசல்களை உள்ளே விழுங்கி வெளியே இழுத்து உணவுக் குழாயின்

உட்புறத்தைத் தடைத்துவந்தான். கடைசியாக ஏற்படுத்திய நாள் வந்தது. பக்கிரியும் அவனது ஆட்களும் ஆயத்தமாக வந்து நின்றனர்.

அப்பொழுது வேடிக்கை பார்க்கும்பொருட்டுச் சில ஐரோப்பியரும் வந்திருந்தனர். ஏமாற்றம் சிறிதுகூட இல்லாமலிருப்பதற்கு வேண்டிய உபாயங்களெல்லாவற்றையும் அவ்விளவரசனும் சாஸ்திரியுமாகச் செய்திருந்தனர்.

பிறகு அவனைப் புதைக்கப்போகும் குழியை வெட்டுவதைப் பக்கிரியே மேற்பார்த்தான். அச்சிறு வீட்டினுள் ஆறு அடி ஆழம் அந்தக் குழியானது வெட்டப்பட்டது. பின்பு அக்குழியின் உட்புறத்தில் கல்லும் சுண்ணும்பும் போட்டுச் சுவர் வைத்தார்கள். மேலும் அவனைப் போட்டுப் பூட்டி வைக்க ஒரு மரப்பெட்டி தயார் செய்யப்பட்டது. அதை மூடிப்பூட்ட அதில் இரண்டு தாழ்ப்பாள்கள் வைக்கப்பட்டிருந்தன. குழியும் பெட்டியும் சரியாயிருக்கின்றனவென்று பக்கிரி ஒப்புக்கொண்டான்.

எல்லாம் ஆயத்தமானவுடன் பெரிதாக ஒரு உள்மூச்சு வாங்கிக் கண்களை மூடிக்கொண்டு மல்லாந்து படுத்துக்கொண்டான். இரண்டொருதரம் நெஞ்சு விம்மி, விம்மிப் பின் அடங்கிற்று; ஆனால் மூக்கின் வழி சிறிதும் காற்று வெளிவரவில்லை. கையும் காலும் இரண்டுதடவை இழுத்துக்கொண்டது. பின்பு அசைவின்றி உடல் விறைத்துப்போயிற்று.

வெகு சீக்கிரம் உள்ளங்காலும் உள்ளங்கையும் குளிர்ந்து போயின. பின்பு படிப்படியாக உடல் குளிரத்தொடங்கிற்று. ஆனால் உச்சந்தலையில் மட்டும் ஓரிடத்தில் சூடு இருந்துகொண்டிருந்தது. அங்கு நாடியும் மெல்லெலன அடித்துக்கொண்டிருந்தது.

பின்பு பக்கிரியின் ஆட்கள் அவனுடல் முழுவதும் ஓர் எண்ணெய்யைத் தடவினர். அவனது நாக்கை வாயின் உட்புறமாக மடித்துவைத்தனர். பின்பு அவர் அவனது கண்கள்முதலிய துவாரங்களை மெழுக்கால் அடைத்தனர். கைகளை மடக்கி மார்பின்மீது சார்த்தினர். பிறகு வெகு சாக்கிரதையாய் உடல் முழுவதையும் துணியால் அநேகம் தடவை சுற்றிச் சுற்றிப் போர்த்தினர். பின்பு உங்கள் இஷ்டம்போல் புதைக்கலாம் என்று இளவரசனிடம் உடலை ஒப்புவித்தனர். இளவரசனும் சுற்றிப்போர்த்த துணியின் நுனிகளைச் சாக்கிரதையாய் நூலும் ஊசியும் கொண்டு தைத்துத் தன்னுடைய முத்திரை மோதிரத்தால் அனேக இடங்களில் முத்திரையிட்டான்.

பின்னர் உடலை எடுத்துப் பெட்டிக்குள் வைத்து மூடியை ஸ்க்ரு ஆணிகளால் இறுக்கினர்கள். ஒவ்வொரு ஆணியின் தலையின் மீதும் ஒவ்வொரு முத்திரையிடப்பட்டது. பிறகு தாழ்ப்பாள்களையிட்டுப் பூட்டுப்போடப்பட்டது. பூட்டுக்களையும் முத்திரையிட்டு வெவ்வேறு ஐரோப்பியர் கையில் அவற்றின் சாவிகள் கொடுக்கப்பட்டன. இதுவும் போதாதோ வென்று பயந்து இருப்புப் பட்டைகள் போட்டுப் பெட்டி கட்டப்பட்டது. இவற்றின் நுனிகளிலும் முத்திரை வைக்கப்பட்டது. பின்பு குழியினுள் பெட்டியை இறக்கி மண்ணைப்போட்டு மூடினார்கள். மண்ணின் மீது கோதுமை விதைக்கப்பட்டது. பின்பு அச்சிற்றுள்ளைப் பூட்டிக் கதவில் ஆறிடங்களில் முத்திரையிட்டு வெளிவந்தோம். எங்களுக்கு மனதில் கொலை செய்தவர்களைப் போலவே இருந்தது.

இவ்வளவு சாக்கிரதையும் போதாவோவென்று ஐயமுற்றுச் சில மகமதியரை அங்கு யாரும் அணுகாதபடி காவல் வைத்தோம். அவருக்கு இதில் சிறிதும் நம்பிக்கையேயில்லை. அவர் பிற மதத்தினர் ஆதலால் வெகு கவனமாகவே இருந்த

னர். இதைக்கண்டு பக்கிரியின் ஆட்களுக்குச் சிறிது பயம் உண்டாகி எங்கு பக்கிரியின் உடலை இவர் என்ன செய்துவிடுவரோ வென்று அஞ்சி அவரும் காவலிருந்து வந்தனர். ஆகவே இரட்டைக்காவல் ஏற்பட்டது.

இவ்வாறு நாற்பது நாள்கள் சென்றன. கண்ணில் எண்ணெய்யை வார்த்துக்கொண்டு விழித்து இரட்டைக் காவல் காத்துவந்தபடியால் ஒருவரும் அப்பக்கிரி புதை பட்டிருந்த இடத்தை அணுகக்கூடவில்லை. பின்பு பக்கிரியைத் தோண்டி எடுக்கவேண்டிய காலம் வந்தது. முன்னர் அங்கிருந்தவர் யாவரும், வேறு பிறர் பலரும் அங்கே வந்து கூடினர். பின்பு எல்லாருமாக வீட்டுக் கதவின் பூட்டைத் திறந்து பார்க்கப் புதையல் மேடு சிறிதும் கலைபடாமல் இருந்தது.கோதுமை முளைவந்திருந்தது,ஆனால் காற்றும் நீரும் இல்லாததால் பயிர் ஒன்றும் பெரியதாகவில்லை. மண்ணைத்தோண்டி மரப் பெட்டியை வெளியே எடுத்துப் பார்த்தனர். ஒரு முத்திரையாவது பெயர்க்கப்படாது எல்லாம் ஒழுங்காகவே இருந்தது. பின்பு, பெட்டியின் மூடியைத் திறந்து துணியில் சுற்றிய பக்கிரியை வெளியே எடுத்தனர். துணியில் வைத்திருந்த முத்திரைகளும் உடைபடாதிருந்தன. தையலும் சிறிதும் பிரிபடவில்லை. துணியைப் பிரித்ததும் குளிர்ந்து உயிரற்ற பக்கிரியின் உடல் காணப்பட்டது. அதைக் காணவும் எங்களுக்கு உடல் சிலிர்த்தது. நாங்கள் நிச்சயமாகவே கொலைபாதகர்களானோம் என்று பயந்தோம்.

நன்கு கவனித்துப் பார்த்ததில் உடல் எங்கும் குளிர்ந்து சில்லிட்டுக் கிடந்தது, உச்சந்தலையில் மட்டும் சிறிது வெதுவெதுப்பும் மிகவும் மெல்லிய நாடியின் அடிப்பும் காணப்பட்டது. பக்கிரியின் ஆட்கள் மூக்கு,கண்,வாய்களினின்று மெழுக்கை அகற்றினர்கள். சுருட்டி உள்ளே தள்ளிய நாக்கை வாயி

னுள் சரியாக விரித்து வைத்தார்கள். பின்பு வெந்நீரில் துணி களை நனைத்து உச்சந்தலையில் மாற்றி மாற்றி வைத்துக்கொண் டிருந்தார்கள்.

பின்பு மூக்குத்துவாரங்களில் வாயை வைத்து ஊதினார் கள், உடலைப் பிடித்தார்கள். நீருள் மூழ்கியோரைப் பிழைப்பு மூட்டுதற்குரிய உபாயங்களனைத்தையும் செய்தார்கள். பக்கிரி மெதுவாகக் கண்ணைத் திறந்து பொறுக்கொணாத் துன்பத் துள்ளாயவன்போல் முகம் சுளித்தான். பின்பு நாற்புறமும் மெல்லெனக் கண்ணைச் சுழற்றி இளவரசனைக் கண்ணுற்றுச் சில்லிட்டதன் கையை நீட்டி "என் அரசே, நம்புகின்றீரா?" என்று தாழ்ந்த குரலில் கேட்டான்.

இளவரசனும் அங்கிருந்தவர் யாவரும் தாங்கள் முற்றி லும் நம்புவதாகக் கூறினர். சந்தேகத்துக்குச் சிறிதும் இட மில்லை யல்லவா? எப்படி நம்பாதிருப்பது?

அரை மணிநேரத்துக்குள் பக்கிரி மறுபடியும் எழுந்து உட்கார்ந்து கொண்டான். அசதியெல்லாம் மாறிவிட்டது. தூங்கி எழுந்த கும்பகர்ணன்போல் நன்றாகச் சாப்பிட ஆரம் பித்தான்.

கரடிகளையும் சில பூச்சி இனங்களையும் போலவே மனித ரும் உண்ணாவுறக்க நிலையில் (Hibernation) வெகு காலம் இருக்கக்கூடும் என்னும் உண்மையை இதுவரையில் ஐரோப் பிய அறிவுநூலாராய்ச்சியர் பரிசோதித்தறியத் துணியவில்லை, அவ்வாறு செய்வது சாத்தியம் என்பதை நேராகக் காட்டிய இப்பக்கிரியின் மகத்துவத்தை எடுத்துக் கூறவேண்டிய தில்லை என்று இந்த மேனாட்டுச் சாஸ்திரி சொல்லுகிறார். மிக த்தொன்மையான காலத்தில் மிருகங்களுக்கு ஒப்பான வாழ் க்கைபுரிந்து வந்த தமது முன்னோரிடமிருந்து இவ்வகைத்த

தாய விந்தையான சக்தியை மனித வருக்கத்தினர் பெற்றிருக்கவேண்டு மென்றும், அது அடிக்கடி வழங்கி வராமற்போனமையால் அந்தச் சக்தி இருப்பது வெளியில் தோன்றாது மறைந்துவிட்டதென்றும், சிற்சில வேளைகளில் சிற்சிலரிடத்தில் இச் சக்தி காணப்படுகிறதென்றும், அவர் கூறுகிறார்.

இக்காலத்தில் சிற்சில மிருகங்களினிடத்தில் சிற்சிலகாலங்களில் மட்டுமே காணப்படும் இச்சக்தியைத் தான்நினைத்தவாறு தனக்குக் கிட்டும்படி சில இந்துச் சன்னியாசிகள் பயின்றிருக்கிறார்கள் என்றும், அவரது சிஷ்யர்கள் அவரை மறுபடியும் உயிர்ப்பிக்கும் முறையை அறிந்து கையாளுகிறார்கள் என்றும் கூறுகிறார். வடஇந்தியாவில் ஓர் இடத்தில் தோண்டும்போது ஒரு பக்கிரியின் உடல் அகப்பட்டதாம், அவரை உயிர்ப்பித்தபின் அவர் அங்கு புதைபட்டு இருநூறு வருஷங்கள் ஆயினவென்று அறியப்பட்டதாம்.

பக்கிரியின் உடல்மீது தேய்க்கப்பட்ட பல தைலங்களும் நோய்வித்துக்கள் புழுக்கள் முதலியவற்றை அணுகாது தடுக்கும் வல்லமை வாய்ந்தன. மேலும் அப்பூச்சினால் காற்றானது உடலில் நேராகத்தாக்காது தடுக்கப்படுகிறது. உடல் துவாரங்களில் அடைத்த மருந்து மெழுக்கும் அதன்பொருட்டே.

இது அமானுஷீகமல்ல. இயற்கையில் சாதாரணமாய் நடைபெறும் நிகழ்ச்சியே. "கட்டுக் கதையினும் விந்தையானது உண்மை நிகழ்ச்சி" என்னும் ஆங்கிலப் பழமொழிக்குரிய உதாரணமாய் இதைக் கூறலாம்.

ஒலி நூல்

Sound.

ஸ்ரீமான். K. P. யஜ்ஞேசுவர சர்மா, M.A., L.T. எழுதியது

[தமிழர்நேசன் IVம் பகுதியின் 93ம் பக்கத்தின் தொடர்ச்சி.]

மேலுள்ள குறுக்குக்கம்பியில் பற்களுடைய மூன்று வட்டத்தகடுகள் (தகடுச் சக்கரங்கள்) காணப்படுகின்றன. (படத்தைப் பார்க்கவும்) அவை குறுக்குக்கம்பியாகும் அச்சுடன்(Axis) சுழலக் கூடியவை. ஒன்றில் 32 பற்களும், இரண்டாவதில் 48 பற்களும், மூன்றுவதில் 64 பற்களும் இருக்கின்றன. இந்த அச்சானது ஒருதோல் அல்லது கயிற்றுப் பட்டையால் ஒருபெரிய சக்கரத்தோடு பிணைக்க (Gear) ப்பட்டிருக்கிறது. அச்சக்கரத்தைக் கையினால் சுற்றினால் மூன்று தகடுகளும் வேகமாகச் சுழலும். சக்கரத்தை நிதானமான வேகத்தோடு சுற்றும்போதே ஒரு காகித அட்டையை (Card-board) முதல் தகட்டின் பற்களில் மெதுவாகப் படும்படி பிடித்தால் பற்கள் அட்டையில் அடிபடும்போது உண்டாகும் ஒலிகள் சேர்ந்து ஒரு ஸ்வரம் கேட்கும். இப்போது சுற்றும் வேகத்தை அதிகப்படுத்தினால் அந்த ஸ்வரத்தின் சுருதி ஏறிக்கொண்டு போகும். ஒரே நிதானமாகச் சுற்றும் பொழுது அட்டையை முறையே ஒன்றன்பின்னொன்றாக மூன்று தகடுகளின் பற்களிலும் படும்படி பிடித்தால் மூன்று வெவ்வேறு ஸ்வரங்கள்கேட்கும். முதலாவதுண்டாகும் ஸ்வரத்துக்கு இரண்டாவது பஞ்சமமாகவும், மூன்றுவது மேல்ஷட்ஜமமாகவும் இருப்பதைச் சிறிது சுருதி

உணர்ச்சியுள்ளவர்கள் (ஸா—பா—ஸா) தெரிந்தவர்கள் கண்டு கொள்ளலாம். முதல் தகட்டினுல் ஒரு குறிப்பிட்டகாலத்தில் 32 அடிகள் அட்டைக்குக் கிடைக்கும்பொழுது அதே காலத்தில் இரண்டாவது மூன்ருவது தகடுகளால் முறையே 48, 64 அடிகள் கிடைப்பதால் இம் மூன்றின்கம்பன எண்களும் 1: 1½: 2 என்ற வீதாசாரம் (Ratio) உடையவை என்றும் அறியலாம்.



பௌதிக நூல்களில் ஸ்வரங்களின் சுருதிகளை அவற்றின் கம்பன எண்களாலும், சுருதி பேதங்களை அக்கம்பன எண்களின் வீதாசார எண்களாலும் (Ratio) குறிப்பிடுவது வழக்கம். சங்கீதத்தில் இவற்றை ஸ்தாயியில்(Octave, scale) ஸ்வரங்களின் ஸ்தானத்தைச் சொல்லிக் குறிப்பிடுவார்கள்.

காம்பீர்யம் (Intensity) என்பது ஒரு ஒலி உரத்ததா, மெல்லியதா என்று குறிப்பதாகும். அது ஒலிக்கும் வஸ்துவின் பாகங்கள் சலிக்கும்போது ஒவ்வொரு கம்பனத்திலும் எவ்வளவு தூரம் வீசுகின்றன (Amplitude) என்பதைப் பொறுத்தது. வீச்சு அதிகதூரம் சத்தத்தை எட்டச் செய்யும் அதிகமாயிருந்தால் சத்தம் உரத்ததாயிருக்கும். மேலும் ஒரு குறிப்பிட்ட ஒலியானது ஒலி யுற்பத்தி ஸ்தானத்

திற்கு அருகில் அதிகக் காம்பீர்யமுடையதாகவும், தூரப் போகப்போகக் காம்பீர்யம் குன்றினதாகவும் இருக்கும் இதையளக்கும் விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தப்படவில்லை நமது காதினால் தாரதம்மியம் கண்டுபிடிப்பதும் சிரமம். மேலும் காதுகளின் வித்தியாசத்தினால் இது விஷயத்தில் பலர் ஒரே அபிப்பிராயம் கொள்வதும் கூடாத காரியம். குண்டுபோட்டால் ஏது புகை என்பவர்களும் இருக்கிறார்களல்லவா ?

குணம் (Quality) பலர் குரலிலாவது வேறுபட்ட வித்தியாசங்களிலாவது ஒரே ஸ்வரம் (அதாவது ஒரே சுருதியுள்ள ஒலி) உற்பத்தி செய்யப்பட்டால் அவற்றில் தன்மை பேதம் யாவருக்கும் புலப்படுகிறது. இதையே அவற்றின் குணங்களின் வித்தியாசமென்கிறோம். இத்தன்மைபேதம் ஒலிக்குக் காரணமான சலனத்தின் ரீதியைப் பொறுத்தது. மேலே அலைகளைப்பற்றி ஆராயும்போது அலை நீளம், வீச்சு, ரூபம் என்ற முக்காரணங்களால் வேறுபடுமென்றும், இவ் வேறுபாடுகள் அலை யுற்பத்திக்குக் காரணமான கம்பனத்தின் ஆவிருத்தி, வீச்சு, ரீதி இவற்றுக் கனுகுணமானவை யென்றும் அறிவோம். இம்மூன்றுக்கும் அனுகுணமாகவே ஒலியின் சுருதி, காம்பீர்யம், குணம் இவையிருக்குமென்று இப்பொழுது குறிப்பிட்டு விட்டோம்.

(தொடரும்).

தில்லைக் கோவிந்தன்.

Thillai Govindan.

மொழி பெயர்ப்பு.

பதிமூன்றாம் அதிகாரம்.

என் மனக்கோட்டைகள் சிலவற்றையும் உண்மை நிகழ்ச்சிகளையும் ஒப்பிடுவது.

சூட்சுமபுத்தியுள்ள என்சிற்றப்பன் கூறியபடி, 'ஒரு கனக்காணும் கவிஞன்' என்றே என்னை ஒருவகையில் சொல்லலாம்; அன்றியும், இயற்கையில் எனக்குள்ள அடக்க ஒடுக்கத்தாலும், வீட்டுப்பழக்கமன்றி வேறுபழக்கமில்லா அநுபவக் குறைவினாலும், என்கனவுகள், எவ்விதத்திலும் குலைவுறாமலிருந்தன. கலாசாலையில் நான் கல்விபயிலும் போது, நியாயம், ஆண்கள் பெண்களின் சமத்துவம், தற்சுதந்திரம், மனச்சாக்ஷிக்கு மாறுபடாத ஒழுக்கம் முதலிய விஷயங்களைப்பற்றி உத்கிருஷ்டமான கொள்கைகளைக் கைக்கொண்டிருந்தேன். மாணவர் வாக்குவாதசபைகளில் நான் பேசிய பேச்சுக்கள் எல்லாம், இவ்வெண்ணங்களை என் மனத்தில் வளர்ந்து முதிரச் செய்திருந்தன. ஆகவே, சர்வகலாசாலைப் பரீக்ஷையில் தேறி, அத்யாபகர் கையிலிருந்து பி. ஏ. பட்ட யோக்கியதா பத்திரத்தை ஏற்றுக்கொள்ளும்பொழுது, அந்த யோக்கியதைக்குத் தக்கபடி இகவாழ்க்கையில் ஒழுகுவேனென்று நான் வாக்களித்தது வெறும் வார்த்தையல்ல; மனப்பூர்வமாய், பயபக்தியுடன், பின்னாட்களில் அவ்வாக்கின்

படி நடந்து, ஒழுக்கசீலத்தால் என் சபதத்தை நிறைவேற்றும் கருத்தோடே அவ்வாறு உறுதிகூறினேன். எனினும், என்வேலையை ஒப்புக்கொண்டபின் தினசரிவாழ்க்கையில் உலக நடவடிக்கைகளை உள்ளபடி கண்ணுற்றபோது, அருமையாய் நான் பாராட்டிப் போற்றிவந்த வெறுங் கனவுகளான என் மனக்கோட்டைகளுக்கும், நாள்தோறும் என்கண்முன் சமுசயத்துக்கிடமின்றி நடந்தேறிய வாஸ்தவ நிகழ்ச்சிகளுக்கும் உள்ள நெடுந்தூரத்தைக் கண்டு, என்மனம் திகைப்புற்றது. நடுநிலையாய் நியாயஞ் செலுத்துவதற்கென்று வேதனம் பெற்று வாழ்பவரே நியாயத்தைத் துட்டுக்கு விற்பதையும், சட்டத்தை நிலைநிறுத்தி நாட்டைப்பாதுகாக்கவென்று சம்பளம் பெறுவோரே சட்டத்தை மீறி நடப்பதையும் கண்டேன்; சுயநயக்கருத்தும் கைக்கூலிவாங்கி அநியாயஞ் செய்வதுமே எங்கும் பரவி நடைபெறுவதை அறிந்தேன். போலீஸ் உத்தியோகஸ்தனாக நான் முதலில் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்று என்குரு எனக்குப் போதித்த முதற்பாடம் என்னவெனில், "சோழியன் குடுமி சும்மா ஆடாது: யார் என்செய்யினும் எந்தச் சுயலாபத்தைக் கருதி அப்படிச் செய்கின்றனர் என்பதை நாடி அறிந்துகொள்" என்பதே. மகாபரிசுத்தமான உறவுமுறைகளிலும்கூட, பொல்லாக்காமத்தாலும் பணவாசையாலும் புருஷர்களும் ஸ்திரீகளும் ஒருவரைஒருவர் தினந்தோறும் ஏமாற்றி மோசஞ் செய்வதைக் கண்டேன். உலகத்தில் எல்லோரும் குலதெய்வமாகக் கும்பிட்டுக்கொண்டாடுவது, மதிவன்மையன்று, நல்லொழுக்கம் சீலம் முதலியன அன்று, பணப்பேய் ஒன்றுதான் என்பதை உணர்ந்தேன். இங்கர்ஸால் முதலிய அறிஞர்களின் நூல்களைப் படித்ததனால் என்மனநிறையைக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்த விலங்குகள் தறித்து நீங்கியபின்பு,

ஜாதிமதம் குலம் ஸ்தானம் முதலியவற்றுக்குரிய கட்டுப்பாடு களின் கொடுமையை நான் நெருங்கிப் பழகி அறிந்ததில்லை; இப்பொழுதுதான் அவை எவ்வளவு ஆதிக்கமும் சக்தியும் வாய்ந்து நமக்குள் விளங்குகின்றன என்பதை உணர்ந்தேன். ஒரு குற்றவாளியின் ஜாதி, மதம், குலம், அந்தஸ்து முதலிய வற்றால், சட்டப்படி அவனுக்குரிய தண்டனை, எவ்வளவோ ஏறவும் குறையவும் கூடுமென்பதை, நான் அடிக்கடி காண லானேன். பரமபரிதாபத்துக்கும் பரிபாலனத்துக்கும் பாத் திரரான ஏழைக்கீழ்ச்சாதிகளே மற்றெல்லோரினும் அதிகம் தண்டிக்கப்பட்டார்கள். ஸ்திரீகள், நிரக்ஷரகுக்ஷிகளாய், ஓய்வொழிவில்லா வீட்டுவேலைகளிலும் வீண் வம்பளப்பிலும் தங்கள் காலத்தைக் கழித்து வந்தனர்; அவர்களைக்கொண்ட புருஷர்களும், பாத்திரம் பண்டம் முதலிய வேறு சங்கம் சொத்துக்களைப்போலவே, அவர்களைப் பொதுவாய்ப் பாவித்து நடத்திவந்தனர்; அதைவிட மேலான பதவிக்கு உரியவர்களாக ஸ்திரீகள் தோன்றவுமில்லை. படித்துத் தேர்ந்துள்ள மேல் வகுப்போர்க்குள்ளும், பிறர் பணத்தையும் பவிஷையும்கண்டு பொங்கும் பொறாமையே எங்கும் வியாபித்திருப்பதையும், எப்பொழுதாவது மூவர் கூடினவிடத்து இரண்டுக்குக் குறை யாமல் கட்சிகள் ஏற்பட்டுவிடுவதையும் கண்டுகொண்டேன். இவை யாவற்றினும் மேலாக, ஐசுவரியத்தாலோ அதிகாரத் தாலோ பெருமை பெற்றவர்க்குச் செலுத்தப்படும் மரியாதை யும் பூஜ்ஜியதையுமே முக்கிய காரணமாக, நல்லபடிப்பும் பயிற் சியும் தரும் நற்பலனை அடைந்தவர்க்குள்ளும்கூட, ஸத்திய விரதத்தில் மதிப்பின்மை, கள்ளஸ்தோத்திரத்தில் அபிருசி, மனச்சாக்ஷிப்படிக் கபடின்றிப் பேசிநடப்பதில் பயம், பிறரு டைய இரகசிய விஷயங்களில் தலையிட்டறிவதில் அபரிமித மான ஆத்திரம், தாமாகவே அற்பத்தனமாய்ப் பிறற்கு உதவி

புரியவும் புத்திமதிகூறவும் வலிந்து செல்லுதல் முதலிய குணக்கேடுகள் பிரவித்தமாய் விளங்குவதைக் கண்டேன். ஸத்தியம், மானம், தன்மரியாதை, கௌரவம் முதலிய வரம்புகளை, அற்பத் தூண்டுதல்களாலும் மீறி நடப்பதையும்; இவற்றுக்கெல்லாம் முடிசூட்டியதுபோல, சொல்வது ஒன்று செய்வது மற்றொன்றாகும் பொய்யொழுக்கம் மலிந்து பிரகாசிப்பதையும் அறியலானேன்.

உலகம் இத்தன்மையது என்ற கடினமான உண்மை என் மனத்திற்பதியவே, பொன்மயமான என்கனவுகள் எல்லாம் நடுங்கிச் சிதறுண்டு, என்மனநிலையை முதலில் ஆட்டிக் குலைத்து விட்டது. ஆயினும், கலாசாலை அத்தியாபகர்முன் செய்த சபதத்தை நிறைவேற்றத் துணிந்து, என்னாலியன்ற மட்டு இத்தீமைகளைத் திருத்த முயல நிச்சயித்தேன். உத்தியோகஸ்தர்களும் வக்கீல்களும், உபாத்திமாரும் கூடும் சங்கமொன்று அவ்வூரில் இருந்தது. நானும் அதைச்சேர்ந்து, எனக்குச் சுவபாவமாயுள்ள அடக்கத்தையும் மௌனத்தையும் விட்டுத்துறந்து, என் கொள்கைகளையும் பொதுஜன ஆசாரச்சீர்திருத்தக் கனவுகளையும்பற்றி அவர்களுடன் உத்ஸாகத்தோடும் தாராளமாயும் பேசத்தொடங்கினேன். குரல் கேட்டறியாத அபூர்வபக்ஷியைப் போல அவர்கள் முதலில் என்னைக் கருதி, என் பேச்சுக்குச் செவிகொடுத்தனர். அதனால், அதிக தைரியம்கொண்டு ஓய்வொழிவில்லாத சீட்டுக்கச்சேரியின்றும் ஊர்வம்பளப்பினின்றும் அவர்களை நான் வெளியே இழுத்து, ஆண்தன்மைக்கும் புத்திவிருத்திக்கும் அவற்றினும் ஏற்ற வேறுகாலக்ஷேபங்களில்அவர்களைப் புகுத்தமுயன்ற பொழுது, என்னை ஒரு "சள்ளை" யாகக்கொண்டு, நாளடைவில் அரைப் பயித்தியம்பிடித்தவனாகவும், "ப்ரும்மராக்ஷஸ" போலும் என்னைக்கருதலானார்கள். மனத்திலுள்ளதை மறையாமல்

வெளியிட்டுப் பேசுவதால், என்னைக்கண்டு அவர்கள் விலகத் தொடங்கினார்கள். ஒருநாள், சங்கத்தில், 'பெண்கல்வி' விஷயமாக, அவருடைய அபிப்பிராயங்களைக் கண்டித்து நான் தாராளமாய் வாதஞ்செய்ததற்காக, டிப்டிகலெக்டர், என்மேல் பெருங்கோபம்கொண்டுவிட்டார்; சட்டத்துக்கும் நீதிக்கும் அதிகாரியான அவருக்குக் கோர்ட்டில் மரியாதையும் தாழ்மையும் காட்டுவது போலவே, சங்கத்திலும், எல்லோரும் காட்டவேண்டுமென்று அவர் எதிர்பார்த்திருந்தார். அவரோ, என் இலாகா முழுமைக்கும் மேலான மாஜிஸ்திரேட்; நானோ, உத்தியோகம் இன்னும் காயமாகாத பரீக்ஷார்த்த வேலை பார்க்கும் போலீஸ் இனிஸ்பெக்டர்; ஆகவே, நான் அவரை இவ்வாறு அலக்ஷியமாய் நடத்திய துணிவைக்கண்டு, சங்கத்தோர் அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். அதற்குப்பிறகு, என்னைக் கண்டவர்கள் என்னைவிட்டு நழுவி விலகத்தொடங்கினர். இப்படிப்பட்ட சங்கத்தை விட்டுவிடுவதே நலமெனக் கருதி, நான் ராஜிநாமாகொடுத்து நீங்கிக் கொண்டேன். இதனிடையில், சங்கத்தின் அங்கத்தினர்களின் வீடுகளுக்குச் சென்று, அவர்களுடைய மனைவிமார்களைக் கண்டு கலந்துபேசி, ஒருவரோடொருவர் பழகி அளவளாவுதற்கும் புத்திவிசாலத்தை விளைக்கும் விஷயங்களில் ஒருமித்துழைத்துப் பொழுது போக்குதற்கும் ஏற்ற "ஸ்திரீகள் சங்கம்" ஒன்றை ஏற்படுத்தும்படி, என்மனைவியைத் தூண்டியிருந்தேன். இவ்வாறு அவள் போய்ப்பார்த்த ஸ்திரீகளில் மிகச்சிலரே பதில் உபசாரமாக அவளை வந்து கண்டனர்; ஒருவர்க்குமே என் உத்தேசம் பிடிக்கவில்லை; என் போலீஸ் உத்தியோகத்துறையில்கூட எனக்குத் தெரியவராத சில புதிய வம்புச்செய்திகளை என் மனைவி தெரிந்து வந்து எனக்குச் சொன்னதைத் தவிர, வேறு பலனொன்றும் இதனால் ஏற்படவில்லை. நாளடைவில்,

தன்ஸ்தானத்தையும் வயதிலும் அந்தஸ்த்திலும் பெரியோர்க் குரிய மரியாதையையும் நன்கு அறியாத அதிகப்பிரசங்கி உலகநடவடிக்கைகளில் நீக்குப்போக்குத் தெரியாத துடுக்கன் என்று என்னைப்பற்றி அவ்வூரார் பேசலாயினர்.

உத்தியோகத்துறையிலும் அப்படியே ஆயிற்று: அதி சமர்த்தரான என் சிக்ஷகர், என்னையும் என் கொள்கைகளையும் எளிதில் அதிசீக்கிரம் அறிந்துகொண்டார்; அவைகளைச் செவ்வனே திருத்தி, வழிக்கு வராவிட்டால், தற்காலம் பரீக்ஷார்த்தம் அளிக்கப்பட்ட என் உத்தியோகம் திடீரென முடிந்துவிடுமென்று நான் அறியும்படி செய்தார். போலீஸ் உத்தியோகத்தை நன்ருய்க் கற்றுக்கொள்ளவேணுமென்ற ஆத்திரத்தாலும் ஊக்கத்தாலும், கீழ் உத்தியோகஸ்தர்கள் கேஸுகளை புரட்டிக் கையாளுவதிலும், சாக்ஷி தயாரிப்பதிலும் செய்யும் உபாயங்களையும் முறைகளையும் உற்றுநோக்கி, அநேக உத்தியோகஸ்தர்களை கஷ்டத்தில் கொண்டு வருவதையும், அநேக கேஸுகளை சீக்கிரமே முடிவிற்குக் கொண்டுவருவதையும் கண்ட என்னுடைய பரமகுரு, சாதாரண விஷயங்களில், கீழ் உத்தியோகஸ்தர்கள் சுயேச்சையாய் நடந்துகொள்ள முழு இடம் கொடுத்து, அவர்கள் செய்கைகளில் தலையிட்டுக் கொள்ளாமலும் உற்றுநோக்காமலும் இருப்பதே உலகத்தில் பேர் பெற்று சிலாக்யதை யடைவிக்கும் இரகசியமென்று எனக்குப்போதித்து, இனிமேல், கீழ் உத்தியோகஸ்தர் விஷயத்தில் தலையிடக்கூடாதென்று உத்திரவு செய்து தடுத்து விட்டார். இவ்விதமிருப்பது, அவர்களின் தீய செயல்களையும் அருவருப்பான நடத்தையையும் ஆதரித்து உற்சாகப்படுத்துவதாகுமென்று நான் எண்ணினேன். மேலதிகாரியான "சூப்பிரண்டெண்டெண்ட்" டிடம் என் சிக்ஷகரைப்பற்றியே எடுத்துச் சொல்லவேண்டுமென்று நான் நினைத்துக் கொண்

டிருக்கும்பொழுது, பின்வருமாறு, என் உத்தியோகமே இல்லாது போயிற்று. அப்போது "ஸெஷன்ஸ்" காலம்; கோர்ட்டில் இரண்டு கொலைக்கேஸுகளும், நான்கு கொள்ளைக் கேஸுகளும் நாங்கள் நடத்தவேண்டும். நியாயாதிபதி, புது உத்தியோகஸ்தன்.பொதுவாய்.போலீஸைப்பற்றியும், விசேஷமாய் உள்ளூர் போலீஸ் நடவடிக்கைகளைப்பற்றியும், அவனுக்கு உறுதியான கெட்ட அபிப்பிராயம் உண்டு. ஆகையால் ஜூரி மனிதர்களின் உதவியால், அவனை விரலசைக்க முடியாமற்பண்ணி கேஸுகளில் நாங்கள் சாட்டிய குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கும்படி செய்விக்க வேண்டுமென்று போலீஸில் தீர்மானிக்கப்பட்டது. அவர் அவர்கள் அதிகாரத்தில் வசித்துவரும் "ஜூரி" மனிதரை, தங்களாலான வழிகளால் சரிப்படுத்தி, கேஸுகளில் நாங்கள் சாட்டியவர்களை குற்றவாளிகள் என்று அவர்கள் தீர்ப்புச்சொல்லும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று, அந்தந்த "டிவிஷன் இன்ஸ்பெக்டர்" களுக்கு உத்திரவு வந்தது. ஜில்லாவின் தலைமையான பட்டணத்திலேயே சில ஜூரிமார் இருந்தார்கள். அவர்களுடன் பிரியமாய்ச் சரசமாய் என்னுடைய மேல் உத்தியோகஸ்தர் பேசி, சிலரைச் சரிப்படுத்தினர். எங்களுக்குச் சரிப்படமாட்டாரென்று சந்தேகித்த மூன்று வியாபாரிகள் மட்டும் பாக்கியிருந்தனர். "நியூஸென்ஸ்" சட்டத்தின் வழியே, அவர்களுக்கும் புத்தி பிறப்பிக்கவேண்டுமென்று அந்தச்சித்திரவேலையை எனக்குக் கொடுத்தார்கள். இதற்கெல்லாம் நான் ஒப்பமாட்டேன் என்று அவ்வேலையை மறுத்ததோடு, இவ்விதமான நடத்தை எவ்வளவு இழிவும் கொடுமையுமானது என்று என் குருவுக்கே நான் உபதேசம் செய்யலானேன். என்னைப்பற்றி மேலதிகாரிகளிடம் என்ன சொன்னாரோ நான் அறியேன்; ஒரு பக்ஷகாலத்திற்குள் பரீக்ஷார்த்தமான என் உத்தியோகம் தீர்ந்துவிட்டதென்றும், பின்னால் என் சேவகம் எப்போது வேண்டியிருக்கிறதோ அப்போது வரலாமென்றும் எனக்கு உத்திரவு வந்தது.

(தொடரும்.)

தமிழ்ச் செல்வம்.

TAMIL CLASSICS

---

67. நெற்பயிர் வளர்ச்சி வருணனை.

"ஈன்றெடுத்தோர் குணமகவுக்(கு) இயையுமுறைப்படி, வித்தில்
தோன்றுமுளை, முன்வெளிர்த்து[1]ப் பின்பசந்த தொடர்பினுல்,
ஆன்ற செழும் கதிர்களும், முன்னுா வெள்ளையாய் எழுந்து,
மான்று மரகதமேனிவாய்த்து, மடல்கிழித் தெழுமால். (1)

"அரமகளிர்[2] அங்கைவளம் அறிபாக்கு[3] மேல் போந்து,
திரைஎறி நீர்க்கடல் வரைப்பில்[4] தெரிவையர்[5] கைக்கிணை ஒவ்வா
மரபுணர்ந்து, மீண்டென்ன, வான்நோக்கிக் கதிர்த்தெழுந்த
பரவுபுனல்[6] தடம்சாலி,[7] பார்நோக்கி இறைஞ்சுமால். (2)

"பேதைமையில், ஆடவர்முன் வளைவின்றிப், பெதும்பைமையில்
மேதகச் சற்றென வணங்கி, மங்கைமையின் மிகநாணும்
மாதரைப்போல், பைங்கூழின் மன்னன்[8] எதிர்கதிர்த்தெழுந்த
ஏதமிலாக்கதிர், முதிர்ந்துவரவரக் கீழிறைஞ்சுமால். (3)

"உருத்திட்பம் உருக்காலத் தலைசிறீஇ, உற்றதன்பின்
தருக்கற்று, கனிவணங்கிப் பழுத்தகதிர்த் தடஞ்சாலி,
பெருக்கத்து வேண்டுமால் பெரும்பணிவு மிகச்சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வெனு மொழியின் சுவைதேற்றும்" (4)

காஞ்சிப் புராணம்.

இந்நூலியற்றியவர் காலம், இற்றைக்குச் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர்; ஊர், திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலூகா பாபநாசத்தை அடுத்த விக்கிரமசிங்கபுரம்; இயற்பெயர், முக்களாலிங்கம்பிள்ளை; தீக்ஷாநாமம்,

---

1. வெளுத்து, 2. தேவஸ்திரீகள்: 3. அறியும்பொருட்டு 4. பூமியில்; 5. மகளிர்; 6. நீர்; 7. நெல்; 8. இந்திரன்,

சிவஞானமுனிவர்; திருவாவடுதுறைமடத்தை அடுத்துவாழ்ந்தவர்; வடமொழியிலும் தமிழிலும் வல்லவர்; தமிழிலக்கிய இலக்கண நூல்களும், சைவசமய நூல்களும் பல இயற்றியுள்ளவர். இச்செய்யுள்களில், நெற்பயிர் வளருவதை, இயற்கை நிகழ்ச்சிக்குப் பொருந்த ஏற்ற உவமானங்களாலும் கற்பனைகளாலும் வருணித்திருக்கிறார். இச்செய்யுள்களின் கருத்து:— (1) பெற்றோர் குணங்கள் மக்களுக்கு இயையும் விதிப்படி, நெல்லின் மூலமானது வித்திலிருந்து வரும்பொழுது முதலில் வெளுத்துப் பின்பு பசந்து காணுவதுபோல, நெல்லின் கதிர்களும் முதலில் வெளுத்துப் பின்பு மரகத நிறமாய் மடலைக் கிழித்துக்கொண்டு கிளம்பும் (2) அவ்வாறு மேல்நோக்கி எழும் கதிர்கள், முதிர்ந்தபின் தலைவணங்கிக் கீழ்நோக்கிக் காணுவது, தேவஸ்திரீகளின் கைகவன்மையை அறியும்படி, முதலில் வானோக்கிச் சென்று, பூலோகமாதரின் கைகளுக்கு ஒவ்வாத உண்மையைத் தெரிந்து, பூலோகத்தையே நோக்கி மீண்டதை நிகர்க்கும். (3) அன்றியும், கதிர்கள் இளம் பருவத்தில் நிமிர்ந்துநின்று முதிரமுதிரத் தலைவணங்குவது, பெண்கள், பேதைபெதும்பைப் பருவங்களில் (5-11 வயது) புருஷரைக் கண்டால் நாணாது மங்கைப்பருவத்தில் (12-13 வயது) நாணுவதை ஒக்கும். (4) நெற்கதிர், மெல்லியதாய் உருத்திட்பம் இன்றியுள்ள இளமையில் தலைநிமிர்ந்து நின்று, உருப்பெருத்தபின் கர்வமின்றி நன்றாய்த் தலைவணங்கித் தோன்றுவது,

> "பெருக்கத்து வேண்டும் பணிதல், சிறிய
> சுருக்கத்து வேண்டும் உயர்வு"

என்னும் திருக்குறளின் உண்மையை விளக்குவது போலும்.

அ. மா.

சதுரங்க ஆட்டவல்லமைமிக்கோன்.

The Chess Champion.

டாக்டர் எம்மானுவெல் லஸ்கர் (Dr. Emmanuel Lasker) என்னும் பெயருள்ள ஐரோப்பாவாசியான யூகமதத்தினரே 1894-ம் வருஷம் முதல் இதுவரை சதுர ஆட்டத்தில இவ்வுலகிலுள்ளவர் யாவரினும் வல்லமை மிக்கோன் (Champion) என்னும் கண்ணிய பதவியை வகித்து வந்திருக்கின்றனர். இவர் 1868-ம் வருஷத்தில் பிறந்தவர். 1894-ம் வருஷத்தில் அதுவரை வல்லமை மிக்கோன் என்னும் பட்டம் பெற்றிருந்த ஸ்டீனிட்ஸ் (Steinitz) என்பாரை ஜயித்துத் தான் அப் பட்டத்தைக் கவர்ந்தனர். இரண்டு வருஷங்களுக்குப் பின்னர் மேற்கூறிய ஸ்டீனிட்ஸ் என்பார் தன்னோடு இன்னொரு முறை ஆடவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளவே அவரோடு இன்னொரு முறை ஆடி அவரை நன்கு தோற்கடித்தார். 1907-ம் வருஷம் மார்ஷல் (F. G. Marshall) என்பவர் இவரைப் போட்டிக்குக் கூப்பிட அவரோடு பதினறு ஆட்டம் ஆடியதில் எட்டில் ஜயித்தனர். ஏழு ஒருவருமில்லாது போயிற்று, ஒன்றில் தோல்வியுற்றார். 1908-ம் வருஷத்தில் டாக்டர் டர்ராஷ் (Dr. Tarrasch) என்பவரோடு பதினறு ஆட்டம் ஆடியதில் எட்டில் ஜயித்தனர், மூன்றில் தோல்வியுற்றனர், ஐந்து ஒருவருக்குமில்லாது போயிற்று. 1910-ம் வருஷத்தில் டேலிக்டர் (Tehlechter) என்பவரோடு பத்து ஆட்டம் ஆடியதில் ஆளுக்கு ஒரு ஆட்டத்தில் ஜயமுண்டாயிற்று, எட்டு ஆட்டம் ஒருவருக்குமில்லாது போயிற்று. இதில் ஜயமுமில்லை தோல்வியுமில்லை. 1914-ம் வருஷத்தில் பீட்ரோகிராடில் (Petrograd) நடந்த பந்தய ஆட்டங்களில் இவரே யாவரினும் வல்லமை மிக்கவர் என்று தீர்

மானிக்கப் பட்டது. நாம் சதுரங்க ஆட்டப் புலவர் என்று முன்னே நமது நேசனில் கூறியுள்ள ஸேனர் காபாபிலாங்கா (Senor Capablanca) என்பவரைவிட இவருக்கு அரை மார்க்குத் தான் அதிகம்.

இப்பொழுது மேற்கூறிய காபாபிலாங்கா இவரைப் போட்டிக்குக் கூப்பிட்டிருக்கிறார். காபாபிலாங்கவை விட இவர் கிட்டத்தட்ட இருபது வயது மூத்தவர்; எனினும் இவருக்கு அனுபோகம் அதிகம் ஆதலால் அதற்கும் இதற்கும் சரியாயிருக்குமென்று கூறலாம். முதலில் சிரமமெடுத்துக் கொள்ளுவானேன், போட்டிக்கு வராது காபாபிலாங்காவை வல்லமை மிக்கோனென்று ஒப்புக்கொண்டுவிடலாமென்று இவர் நினைத்தாராம். ஆனால் காபாபிலாங்காவுக்கு அது அவ்வளவு சம்மதமில்லையாம். தன்னால் கூடுமானால், ஆடி ஜயித்தே பட்டம் பெற அவர் விரும்பினாராம். மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொண்டதின் பேரில் காபாபிலாங்கோவோடு ஆடுவதற்கு இசைந்தனராம். முதலாவது யார் எட்டு ஆட்டத்தில் ஜயிக்கின்றனரோ அவரையே ஜயித்ததாக ஒப்புக்கொள்ளவேண்டுமென்று இருவரும் உடன்பட்டிருக்கின்றார்களாம். ஒருவருக்கு மில்லாதுபோகும் ஆட்டங்களைக் கணக்கில் சேர்ப்பதில்லையாம். ஒருமணி நேரத்திற்குள் இத்தனைதரம் காய்களை ஒவ்வொருவரும் நகர்த்தவேண்டுமென்றும், ஆடும் ஒவ்வொருநாளும் நாலுமணிநேரம் ஆடுவதென்றும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றனராம். இதுவரை பன்னிரண்டு ஆட்டம் அவர்கள் ஆடியதில் பத்து ஒருவருக்கும் இல்லாது போயிற்றாம். இரண்டில் காபாபிலாங்கா ஜயித்திருக்கிறார். சதுரங்க ஆட்டத்தில் பற்றுடையவர் யாவரும் இந்த ராமராவண யுத்தம் எவ்வாறு முடியுமென்று ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

அறிவுநூல் மொழிகள்.

Scientific Terms.

சென்னைச் சட்டக் கலாசாலையில் போதகராயிருக்கும்
ஸ்ரீமான் K. சுப்பிரமணியம் M. A., M. L.,
எழுதியனுப்பியது.

Graph :—	வரை, எழுத்து
Autograph	தன்வரை, தம்வரை
Cinematograph	அசையுருவரை, செல்வடிவரை
Heliograph	பகலொளிவரை
Holograph	முழுவரை
Horograph	போதுவரை, நேரவரை
Phonograph	எழுத்திசைவரை
Photograph	ஒள்வடிவு, (ஒண்) வடிவரை
Radiograph	கதிர்க்கால்வரை
Telegraph	தூரவரை
Phone	ஒலி
Gramophone	வரையொலி
Telephone	சேயொலி
Megaphone	பெருக்கொலி

நமது நேசனைப் படிக்கும் நண்பர்கள் இம்மொழிகளை நன்கு ஆராய்ந்து அவற்றுள் யாவற்றையாயினும் தாம் ஒப்ப முடியாதென நினைப்பின் அவற்றிற்கு ஈடான மொழிகளை எனக்கு எழுதி அனுப்பும்படி தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறேன்.

கௌரவத் துணைக் காரியதரிசி,
தமிழர் கல்விச் சங்கம்.